<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

அனுப்புநர்
திரு.P.குமார் சிங்,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்
திருநெல்வேலி.

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:21.06.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – அவரசக்கூட்டம் **19.06.2020** அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் **19.06.2020** அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு ஜீன்மாதம் 19ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண் : 1

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் குறிப்பு எண். 01/2020, நாள்.15.06.2020ல் தெரிவித்துள்ளபடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (CTDP) (Comprehensive Tribal Development Programme) கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.1ல் கருப்பாநதி அணை அருகில் அமைந்துள்ள பழங்குடியினர் குடியிருப்பில் (கலைமான் நகர்) சேதமடைந்த 22 எண்ணம் தனித்தனி (Individual) வீடுகள் மற்றும் மின்விளக்குகளை சீரமைக்கவும், அங்குள்ள குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி அங்கன்வாடி கட்டிடம் மற்றும் சமுதாய கழிப்பிடம் அமைக்கவும் உரிய முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மேற்கண்ட திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.79.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1990/2020/இ1)

**தீர்மான எண். 126**

அனுமதிக்கப்படுகிறது.

(ஒம்)P.குமார் சிங்
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.